**அடைக்கல அன்னை சபைத் தலைமையகம்**
**அரண்வாயல் குப்பம்**
**திருவள்ளூர் மாவட்டம் - 602 025.**

**சுற்று மடல் எண்: 93** **நாள்: 22.03.2022**

# என் பாசத்துக்குரிய அருட்சகோதரிகளே!

**நெஞ்சம் நிறைந்து உங்களை அன்போடு வாழ்த்துகிறேன்.**

நிதி ஆண்டின் இறுதி நாட்களில் இருக்கின்ற நமக்கு
கண் முன் வருவதெல்லாம் ஆண்டு தணிக்கைதான்.
ஆண்டுத் தணிக்கைக்கு எந்த விதமான குறைபாடும்
இல்லாமல் இருக்க வேண்டும் என்றெல்லாம் தீவிரமாக முயற்சிக்கிறோம்
மிக்க மகிழ்ச்சி.

**அதேபோல் நம் வாழ்க்கைக் கணக்கையும்**
**தணிக்கை செய்ய வேண்டும் என்ற எண்ணம் நமக்கு இருக்க வேண்டும்.**

கடவுளின் Budget –க்கு ஏற்றபடி நம் வாழ்வை அமைத்துக் கொள்வதை விடுத்து
நாமாகப் போட்ட Budget Tally ஆகாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டிய காலமிது.
நாம் சொல்லும் பயனற்ற சொற்கள் ஒவ்வொன்றும் செலவீனங்கள்தான்.
ஒரு நாளில் நமக்கு என்ன வருவாய் என்பதைக் கவனத்தில் கொள்ளாமலே செலவு செய்து
நம் நாட்டைப் போல நாமும் கடனில் வாழ்கிறோமா? **சிந்திப்போம்.**

நமது தணிக்கைக்குத் தயார் செய்யும் இத்தருணத்தில்
நம் வாழ்க்கை கணக்கையும் அசைபோட்டுப் பார்ப்போம்.

இந்த சிறிய சிந்தனையோடு ஆண்டுத் தணிக்கைக்கு அழைப்பு விடுக்கிறேன்.

**ஆண்டுத் தணிக்கை**

| | | |
|---|---|---|
| 2022 ஏப்ரல் 04 முதல் 10 வரை | - | தஞ்சை மாநிலம் |
| 2022 ஏப்ரல் 11 முதல் 13 வரை | - | திண்டுக்கல் மாநிலம் |
| 2022 ஏப்ரல் 18 முதல் 21 வரை | - | சென்னை மாநிலம் |

- தணிக்கை பற்றிய விரிவான விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
- அனைத்து கணக்குகளும் முடிக்கப்பட்டு மைய நிதியாளரின் ஒப்பதல் பெற்ற பின்னரே தணிக்கை செய்யப்படும்.

- சிலர் பல காரணங்களைச் சொல்லிக்கொண்டு சில கணக்கு ஏடுகளை பொது நிதியாளரிடம் காண்பிப்பதில்லை என வருத்தப்படுகிறார்கள். யாராவது அப்படிச் செய்வதாக இருந்தால் அந்த Account அவர்கள் பொறுப்பிலிருந்து எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.
- உண்மையும் நேர்மையும் உள்ளவர்களுக்கு மட்டுமே பணத்தைக் கையாளும் தகுதி இருக்கிறது
- இணைக்கப்பட்டுள்ள தணிக்கை பற்றிய விவரங்களைப் படித்து சரியான முறையில் தணிக்கைக்குத் தேவையானவற்றை தயாரித்துக் கொண்டு வர அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**“பணமும் காசும் வெறும் கல்லுக்கும் மேலாகக் கணிப்பவர்களை சாத்தான் பார்வை இழக்கச் செய்கிறான். எனவே எல்லாவற்றையும் விட்டுவிட்டு வந்த நாம் இச்சிறிய காரியத்திற்காக விண்ணரசை இழந்துவிடாதபடி கவனமாக இருப்போமாக”. (ஊற்று ஆ. ஓ. 8: 4,5)**

**அக ஒளியின் பாதையில்**

Sr. Maria Ghilani FBS

**சபைத் தலைமை அன்னை**